சுற்று நிருபம் - 04/2018(i)

கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு
வடமாகாணம்
18/9 வைமன் வீதி
நல்லூர்.
24.09.2020

கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு சுற்றுநிருபம் **04/2018** இற்கமைவான விசேட செயலாற்றுகைக் கொடுப்பனவு **(Special Performance Allowance)** திருத்தம் செய்தல் தொடர்பாக.

சுற்றுநிருபம் 04/2018 இலக்கம் கொண்ட 01/07/2018 திகதியிட்ட மீளமைக்கப்பட்ட சம்பள அளவுத்திட்டம் என்ற விடயம் கொண்ட சுற்றறிக்கையின் 11 ஆவது பிரிவு விசேட செயலாற்றுகைக் கொடுப்பனவு என்ற விடயம் பின்வருமாறு மாற்றியமைக்கப்படுகின்றது.

விசேட செயலாற்றுகைக் கொடுப்பனவை ஒவ்வொரு மாதமும் கூட்டுறவுச் சங்கம் தனது தேறிய இலாபத்தினை அடிப்படையாகக் கொண்டு இயக்குனர் சபையின் தீர்மானத்துடன் வழங்கலாம். எதிர்கால நடைமுறை செலவினங்கள் இதர மூலதனச் செலவுகளை கருத்தில் கொண்டு தேறிய இலாபத்தினை மாதாந்தம் கணக்கிட்டு உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

முதல் மாதத்து இறுதிக் கணக்குகளை அடுத்த மாதம் தயாரித்து இயக்குனர் சபையினரின் உறுதிப்படுத்தலுடன் இக் கொடுப்பனவை பணியாளர்களுக்கு வழங்கலாம்.

இச் சுற்றறிக்கையானது பணியாளர்கள் குறித்த கொடுப்பனவை அடுத்து வரும் மாதத்திலேயே பெற்றுக்கொள்வதற்கேதுவாக மாற்றியமைக்கப்படுகின்றது.

23.09.2020 ஆம் திகதிய ஆணைக்குழுவின் தீர்மானத்தின்படியானது.

த.உமா
செயலாளர்

த. உமா
செயலாளர்
கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு
வடமாகாணம்